மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே நேற்று கப்பலூர் டோல்கேட் எதிர்ப்பு போராட்டத்தில் அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் ஈடுபட்டு கைதாகி தனியார் மண்டபத்தில் அடைக்கப்பட்டிருந்த அண்ணா தி.மு.க.வினர் மற்றும் போராட்ட குழுவினருக்கு அதிமுக மருத்துவர் அணி சார்பில் மாநிலத் துணைச் செயலாளர் உசிலம்பட்டி டாக்டர்.விஜயபாண்டியன் மருத்துவ பரிசோதனை செய்து இலவச மாத்திரைகளை வழங்கினார்.

மதுரை மாவட்டம் பாலமேட்டில் இந்து நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட பத்ரகாளியம்மன் கோவில் வளாகத்தில் அமைந்திருக்கும் பால விநாயகர் கோவிலில் 48ம் நாள் மண்டல பூஜை விழா இன்று நடைபெற்றது.

## அலங்காநல்லூர் குறவன்குளம் காமாட்சி அம்மன், வலகருப்பணசுவாமி மண்டலாபிசேக விழா

அலங்காநல்லூர், ஜூலை. 31.

மதுரை மாவட்டம் அலங்கா நல்லூர் அருகே குறவன்குளம் கிராமத்தில் காமாட்சி அம்மன், வலகருப்பு ணசுவாமி கோவில்களின் மகா குடமுழுக்கு விழா கடந்த மாதம் நடைபெற்றது. 48 வது நாள் மண்டல பூஜை பட்டர்களின் வேத மந்திரங்கள் முழங்க காசி இராமேஸ்வரம் உள்ளிட்ட புண்ணியத் தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித தீர்த்தங்களை வானத்தில் கருடன் வட்டமிட சுவாமிகள் மீது புனித நீர் ஊற்றப்பட்டு மண்டல பூஜை நடந்தது.கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு கோவிலின் சார்பில் பூஜை பொருட்களும் அன்னதானமும் வழங்கப்பட்டது. இவ்விழா ஏற்பாடுகளை காமாட்சி அம்மன் கருப்பண்ண சுவாமி கோவில் பங்காளிகள் செய்திருந்தனர்.

## எழுத்து உங்கள் வாழ்வின் முடிவை மாற்றும் வல்லமை படைத்தது: எம்.எம்.அப்துல்லா பேச்சு

புதுக்கோட்டை, ஆக.1–

எழுத்து ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் முடிவையே மாற்றும் வல்லமை படைத்தது என்றார் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா. புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில் அவர் பேசியதாவது:–

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் 1991ம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் அறிவொளி இயக்கத்தை மிகவும் வெற்றிகரமாக நடத்திய இயக்கம். அறிவொளி இயக்கத்தில் மாணவப் பருவத்தில் நான் தன்னார்வத் தொண்டராக, கலைக்குழு செயல்பாட்டாளராக செயல்பட்ட காலம் எல்லாம் மறக்கமுடியாத அனுபவங்கள்.

அப்பொழுது முதல் தற்பொழுது வரை தமிழ்நாடு அறிவியல் இயக்கம் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு விழிப்புணர்வு செயல்பாடுகளை நிகழ்;த்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக தற்பொழுது புத்தகத் திருவிழாவை ஆரம்பத்தில் தனித்தும், கடந்த இரண்டு வருடங்களாக மாவட்ட நிர்வாகத்துடனும் இணைந்து நடத்தி வருவது பாராட்டுக்குறியது.

எழுத்து ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் முடிவையே மாற்றிவிடும். வணிக குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு இளம் வயதில் எனக்கு அரசியல் ஆர்வம் ஏற்பட்டது. அதை எனது குடும்பத்தினர் விரும்பவில்லை. முடிவை எடுக்க முடியாமல் தவித்த எனக்கு கருப்பினத் தலைவர் மார்க்கிங் லூதர்கிங் எழுத்திய புத்தகம் எனக்கு தெளிவைக் காட்டியது. அதுதான் அரசியல்வாதியாகத் தொடர எனக்கு உந்துசக்தியாக இருந்தது.

ஒரு கதையைத் திரைப்படமாக பார்க்கும் அந்தப் பட இயக்குநர் பார்வையில் தான் காட்சிப்படுத்தப்படும். ஆனால், அதே கதையை எழுத்தில் படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான காட்சிகள் அவர்களின் கற்பனையில் விரியும். இதுதான் எழுத்தின் சிறப்பு. விசாலமானஅறிவை புத்தகங்கள்வாயிலாக மட்டுமே பெற முடியும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றான் வள்ளுவன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நமது முன்னோர்கள் எழுதிவைதான் இந்த மண்ணில் இன்றைக்கு வாழ்வியலாக அரசியலாக மாறி இருக்கிறது. இவ்வாறு எம்.எம்.அப்துல்லா எம்பி பேசினார்.

மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மேட்டூர் அணையிலிருந்து உபரிநீர் திறந்து விடப்பட்டதையொட்டி கொள்ளிடம் ஆற்று கரையோர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக முன்னேற்பாடு கூட்டம் மாவட்ட கலெக்டர் மகாபாரதி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட போலீஸ் சூப்பிரெண்டு மீனா, மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொ) முத்துவடிவேல் உள்ளனர்.

### மாவட்ட சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்

## திண்டுக்கல்லில் முன்னாள் படைவீரர்கள் 6 பேருக்கு நலத்திட்ட உதவிகள்: கலெக்டர் பூங்கொடி வழங்கினார்



திண்டுக்கல், ஆக.1–

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் – சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு 2024ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற குறைதீர் கூட்டங்கள் நடத்தப்பட்டு, உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர்கள் தொடர்பான மனுக்களை உடனுக்குடன் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு, இலவச வீட்டுமனை பட்டா, கடனுதவி, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை என பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று நடைபெற்றது. இன்றைய கூட்டத்தில் 37 மனுக்கள் பெறப்பட்டன.

ஏற்கனவே முதலாம் காலாண்டிற்கு நடத்தப்பட்ட சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர் அவர்களைச் சார்ந்தோர் களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யின்பேரில், தொகுப்புநிதி கல்வி உதவித் தொகை 2 பயனாளிகளுக்கு ரூ.50,000, கண் கண்ணாடி மானியம் ஒரு பயனாளிக்கு ரூ.4,000, வீட்டுவரி சலுகை மானியம் 2 பயனாளிகளுக்கு ரூ.5326, புற்றுநோய் நிவாரண நிதி உதவித்தொகை ஒரு பயனாளிக்கு ரூ.21,000 என மொத்தம் 6 பயனாளிகளுக்கு ரூ.80,326 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர்(கூ.பொ.) ச.சுகுணா, முன்னாள் இராணுவத்தினர் மருத்துவமனை பொறுப்பு அலுவலர் ஓய்வு பெற்ற லெப்டினென்ட் கர்னல் வீரமணி, முன்னாள் படைவீரர்கள், அவர்தம் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் மாமன்றக் கூட்டம் மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது. அருகில் கமிஷனர் தினேஷ்குமார் துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

## விருதுநகர் காமராஜர் பொறியியல் கல்லூரியில் கவர்னர் ஆர்.என்.ரவி தலைமையில் சிறந்த கல்வி சேவைக்கான விருது வழங்கும் விழா

விருதுநகர், ஆக.1–

விருதுநகர் காமராஜர் பொறியியல் கல்லூரியில் கல்லூரி நிர்வாகம் அன்னை பத்ரகாளி அறக்கட்டளை இணைந்து நடத்திய மாநில அளவிலான பள்ளி கல்லூரிகளின் சேவைகளை பாராட்டி சிறந்த கல்வி சேவைக்கான விருது வழங்கும் விழாவில் விருதுநகர் காமராஜர் பொறியியல் கல்லூரியில் கவர்னர் ஆர்.என்.ரவி தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் தேனி மாவட்டத்தில் நல்லதொரு கல்வி நிறுவனம் என்ற தேனி நகர் மற்றும் மாவட்டம் முழுவதும் பொதுமக்களின் நன்மதிப்பை பெற்ற மாவட்ட மக்களின் இதயத்துடிப்பாக விளங்கும் நாடார் சரஸ்வதி கல்லூரி மற்றும் பள்ளிகளின் சேவையை ஊக்குவிக்கும் விதமாக நாடார் சரஸ்வதி கல்லூரி நிறுவனங்களின் தலைவரும் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவரும் மாவட்டத்தின் கல்வித் தந்தையுமான ராஜமோகனுக்கு விழாவில் கவர்னர் ஆர்.என்.ரவி விருது வழங்கி கௌரவித்தார்.

இந்த விருது வாங்கி தமிழகத்திலேயே தேனி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கல்வித் தந்தை ராஜமோகனுக்கு தேனியில் உள்ள தனியார் மண்டபத்தில் பாராட்டு விழா நடைபெற்றது இந்த விழாவில் தேனி மாவட்டத்தில் உள்ள அரசியல் பிரமுகர்கள் கல்வி நிலைய அதிபர்கள் வணிகர்கள் சங்க தலைவர் மற்றும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் பாராட்டு விழாவில் பங்கேற்று தங்களின் தன்னலமற்ற சேவையைத் தொடரவும் இன்னும் பல விருதுகள் வாங்கி நலத்துடன் வாழ வேண்டும் என மனதார வாழ்த்தினார்கள்.

## ரூ.3.45 கோடி கட்டப்பட்ட மேலூர் யூனியன் அலுவலக கட்டிடத்தை காணொளி காட்சி மூலம் முதலமைச்சர்ஸ்டாலின் திறந்து வைத்தார்

மேலூர், ஆக.1–

மதுரை மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் 20212022 திட்டத்தின் கீழ் சுமார் 3 கோடியே 45 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் தலைமைச் செயலகத்திலிருந்து திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா, மேலூர் ஆர். டி.ஓ ஜெயந்தி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் சூரியகலா கலாநிதி, மேலூர் யூனியன் சேர்மன் பொன்னுச்சாமி, மேலூர் யூனியன் வைஸ் சேர்மன் பாலகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர் நேருபாண்டியன், மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் பி.டி.ஓ உலகநாதன், ரத்தின கலாவதி ஆகியோர் குத்து விளக்கு ஏற்றினார்.

உடன் மாவட்ட திமுக தொண்டர் அணி அமைப்பாளர் நாவினிபட்டி வேலாயுதம், மேலூர், கொட்டாம்பட்டி திமுக ஒன்றிய கழக செயலாளர்கள் குமரன், ராஜராஜன், ராஜேந்திரபிரபு, கிருஷ்ணமூர்த்தி, பழனி, மேலூர் முன்னாள் யூனியன் சேர்மன் செல்வராஜ், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள், யூனியன் அலுவலக பணியாளர்கள், திமுக கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவிற்கிணங்க திருச்சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூர் வட்டம் வாத்தலை கிராமம் புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீரை டெல்டா பாசனத்திற்காக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு. திறந்து வைத்தார். மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் மண்ணச்சநல்லூர் எம்.எல்.ஏ. கதிரவன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் நீர்வளத்துறை பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் “உங்களை தேடி, உங்கள் ஊரில்” திட்டம்: கலெக்டர் ஆகாஷ் கள ஆய்வு

நாகை, ஆக.1–

நாகப்பட்டினம் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் “உங்களை தேடி, உங்கள் ஊரில்” திட்டத்தின் கீழ் மாவட்ட கலெக்டர் ப.ஆகாஷ், கள ஆய்வு மேற்கொண்டார்.

மக்களை நாடி, மக்கள் குறைகளை கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் “உங்களை தேடி உங்கள் ஊரில்” திட்டம் அறிவிக்கப்ப ட்டுள்ளது. இதன்படி, “உங்களை தேடி, உங்கள் ஊரில்” திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மாவட்ட கலெக்டர் அரசு அலுவலகங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தும் கள ஆய்வு மேற்க்கொண்டார்.

நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கிராம ஊராட்சி பிரிவு, வட்டார வளர்ச்சி பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு அறைகள், உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ள ப்பட்டுவரும் அறைகள் குறித்தும் மேலும் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவுகள் குறித்தும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் தொடர்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்து கணினி மூலம் மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் வரி வசூல் மையத்தில் வரிகள் தொடர்பாக மேற்கொ ள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார். நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவுகள் குறித்தும், அலுவலக பணிகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

அதனைத்தொடர்ந்து ஒரத்தூரில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, தீவிர விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஆகியவற்றையும், பின்னர் மருத்துவமனை வளாகத்திலுள்ள வெளி நோயாளிகள் பெயர் பதிவு செய்யும் அறை, மருந்தகம் மற்றும் மருந்துகள் பாதுகாப்பறை, ஆய்வகம், மருத்துவர்களின் அறையினையும் பார்வை யிட்டு, மருத்துவமனையை சுத்தமாக வைத்துக் கொ ள்ளவும், வெளிநோயாளிகள் சிகிச்சை பெற வரும்போது அவர்களது காலம் விரயமாகாமல், விரைவான சேவையை வழங்க வேண்டும் எனவும் மருத்துவ அலுவல ர்களுக்கும் பணியாளர்களுக்கும் செவிலிய ர்களுக்கும் அறிவுறுத்தினார். இக்களஆய்வில் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மருத்துவர்.ஆர்.செந்தில்நாதன், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் டி.லீனா சைமன், நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் செஸ்தி யம்மாள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(பொது) டி.சாரதா, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஈத்தங்காடு பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.


ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

kotak Kotak Mahindra Bank

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 27BKC, C-27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை - 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006,
லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை பொர்க்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு**

"புல்லர்ட்ன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்" (இனி "FIHFCL" என்று குறிப்பிடப்படுகிறது) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கீயதன் அடிப்படையில், 28.06.2021 அன்று "புல்லர்ட்ன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்" (இனி "FIHFCL" என்று குறிப்பிடப்படுகிறது) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.60410751021098 ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி திரு. சுல்தான் மைதீன் எஸ், திருமதி. நூர்ஜஹான் எஸ் & M/s. பிளம்ஸ் ஸ்டோர் ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 31.07.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.13,16,873/–(ரூபாய் பதிமூன்று லட்சத்து பதினாறாயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்று மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| ஏலத் தேதி | 22.08.2024 |
| ஏலம் நடைபெறும் நேரம் | மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை<br>5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் |
| ரிசர்வ் விலை | ரூ.4,80,000/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) |
| டேவணித் தொகை டெபாசிட் (EMD) | ரூ.48,000/- (ரூபாய் நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) |
| Kyc உடன் Emd ஐ சமர்பிப்பதற்கான கடைசி தேதி | 21.08.2024 அன்று மாலை 5:00 மணி வரை<br>(இந்திய நேரப்படி) |

ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், நிலம் மற்றும் கட்டிடம். திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர் சார் பதிவு மாவட்டம், வேடசந்தூர் தாலுக்கா, கூம்பூர் பழைய நத்தம் சர்வே. 782/2, புதிய நத்தம் சர்வே.1034/19, விஸ்தீரணம் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 42.5 அடி, வடக்கிலிருந்து தெற்காக இரண்டு பக்கமும் 54 அடி, மொத்த விஸ்தீரணம் 2295 சதுர அடி நிலம் மற்றும் ஆர்சிசி தளம் போடப்பட்ட கட்டிடம் 763.25 சதுர அடி. எல்லைகள் : மேற்கு : காலி மனை மற்றும் சுற்றுச் சுவர், கிழக்கு : காலி மனை, தெற்கு : அப்துல் ஹை மற்றும் அப்துல் ரஷீத் ஆகியோருக்கு சொந்தமான வீடு, வடக்கு : அட்டவணை ஏ அமிட்டம் 2 சொத்து. பரிதா பேகத்திற்கு சொந்தமானது.

தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. **விஷால் ஆகிஷேன் (+91 9941016600), திரு. ராஜேந்தர் தஹூயா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com ல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம்: வேடசந்தூர் (தமிழ்நாடு), தேதி: 31.07.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்.